மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.205/2022

2026ம் ஆண்டு மார்ச் 27ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமிநாதன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

27.03.2026 வா.சா.3 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கில் நான் 2ம் வாதி என்றால் சரிதான். எங்கள் தரப்பில் எனக்கு முன்பு ஒரு சக்திவேல் என்பவரை சாட்சியாக விசாரித்துள்ளோம் என்றால் சரிதான். எங்கள் தரப்பில் ஒரு மூன்றாம் நபரை சாட்சியாக விசாரித்ததற்கு பின்னிட்டு என்னை சாட்சியாக விசாரிக்க நான் நீதிமன்றத்தில் இருந்து அனுமதி கேட்டு மனு எதுவும் போட்டு அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். அதனால் எனது சாட்சியம் நிராகரிக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல எங்கள் தரப்பில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட சக்திவேல் என்பவர் சரியாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் தான் நான் இந்த வழக்கில் என்னை சாட்சியாக விசாரித்துக் கொண்டுள்ளேன் என்றால் ஆமாம்.

2. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு நான் ஆவணம் கொடுத்துள்ளேன் என்றால் முதலிலேயே ஆவணங்களை

கொடுத்துள்ளோம் என்ன ஆவணத்தை கொடுத்துள்ளோம். என்ன ஆவணம் கொடுத்துள்ளோம் என்றால் ஆவண தேதி தெரியவில்லை 2022 ஆம் ஆண்டு ஆவணங்களை கொடுத்துள்ளோம். எனது பெயரில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல அதைத்தான் கொடுத்துள்ளோம் அது என்ன ஆவணங்கள் என்றால் க.ச.எண்.885 மற்றும் 886 காண பத்திரம், சிட்டா, RSR கொடுத்துள்ளோம் நான் சொல்வது போல் நான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. பிரதிவாதிகள் பூமியானது நால்ரோடு கிராமம் 883/ஏ 5 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் பூமியின் தென்புறத்தில் 886 காலை உள்ளது என்றால் ஆமாம். பிரதிவாதிகள் காலையின் கிழபுரத்தில் 882 மற்றும் 887 ஆகிய காலைகள் உள்ளதா என்றால் ஆமாம். பிரதிவாதி இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 221/2022 என்ற வழக்கை நாங்கள் அவரது சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்டு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதை பொய்யான சங்கதிகள் சொல்லி தாக்கல் செய்திருந்தார்.

4. அந்த வழக்கானது கடந்த 27.10.2025 தேதியில் பிரதிவாதி கோரியபடி தீர்ப்பாகிவிட்டது என்று சொன்னால் சரிதான். அது சம்பந்தமாக இதுவரை மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் இனிமேல் தான் தாக்கல் செய்ய வேண்டும். காலை எண் 886 மற்றும் 887 மற்றும் 882 ஆகிய காலைகளில் கிழமேலாகவும், தென்வடலாகவும் பாதை அமைந்துள்ளது என்பதை பொறுத்து நாங்கள் நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று அழைத்துச் சென்று

காட்டவில்லை என்றால் மனுசெய்தோம் அது தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. அந்த தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான்.

5. காலை எண்.886 க்கு வடபுறத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் சரிதான். 882 மற்றும் 887 காலைகளின் மேல்புறத்தில் பிரதிவாதிகளுக்கு பூமிகள் உள்ளது என்றால் ஆமாம் பிரதிவாதி பூமிகளில் அமைத்திருந்த கம்பி வேலியை நாங்கள் சேதப்படுத்தி விட்டோம் என்று என் மீதும் என் மனைவி மீதும் 4ம் வாதி பாலசுப்பிரமணியம் ஆகியோர்கள் மீது பிரதிவாதி கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அந்த புகார் பிரதிவாதியால் பொய்யாக கொடுக்கப்பட்டது. அந்த வழக்கில் நாங்கள் ஜாமீன் பெற்றோம் என்றால் சரிதான்.

6. பிரதிவாதி எங்கள் பூமியை ஆக்கிரமித்து விட்டார் என்று தான் இந்த வழக்கை நாங்கள் போட்டுள்ளோம் என்றால் இல்லை எங்கள் பூமியில் உள்ள தடத்தை அத்துமீறி வந்து இடைஞ்சல் செய்கிறார் என்று தான் இந்த வழக்கை போட்டு உள்ளோம். குமாரசாமி பூமிக்குள் நாங்கள் சொல்லும் தாவா தடம் இருப்பதாக சொல்லித்தான் இந்த வழக்கை போட்டுள்ளோம் என்றால் இல்லை. எங்கள் தடம் எங்கள் பூமியான 886 மற்றும் 887 ஆகியவற்றில் தான் உள்ளது அந்தத் தடத்தை கம்பி வேலி போட்டு அத்துமீறி ஆக்கிரமிக்க பிரதிவாதி முயற்சி செய்ததை நாங்கள் தடுத்துக் கொண்டோம்.

7. பிரதிவாதி அவரது அத்தில்தான் கம்பி வேலி போட்டிருந்தார் என்றும் நாங்கள் அதை சேதப்படுத்தியதால் தான் எங்கள் மீது புகார் கொடுத்தார் என்றும் சொன்னால் அங்கு கம்பி வேலியே இல்லை. இந்த வழக்கை பாலசுப்பிரமணி தான் முன் நின்று நடத்துகிறார் என்றால் இல்லை

நாங்கள் நான்கு பேரும் தான் நடத்தி வருகிறோம். பாலசுப்பிரமணி தான் முன் நின்று நடத்துகிறார் என்றால் ஆமாம். நானோ, பிரதிவாதியோ சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டோமா என்றால் இல்லை. இந்த வழக்கு எந்த வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2022 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது.

8. நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே குமாரசாமி எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து விட்டார் என்றால் ஆமாம். குமாரசாமி எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்னிட்டு நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்யும் வரை தாவா சொத்தைப் பொறுத்து எந்த பிரச்சனையும் நடக்கவில்லை என்றால் குமாரசாமி வழக்கு போடுவதற்கு முன்பு நடந்த பிரச்சனைக்கு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

9. இந்த வழக்கிற்கு எந்த வழக்கு மூலமும் கிடையாது என்றும் பிரதிவாதி எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்ததால் அவர் மீது ஒரு வழக்கு போட வேண்டும் என்ற காரணத்திற்காக நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எனவே நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.03.27 19:30:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்